திரு. வி. கே. கோதண்டராமன்: 3–4–1970-ம் தேதிய நவசக்தியும், இன்றைய பத்திரிகை, 6–4–1970-ஆம் தேதிய நாத்திகம் **ஆக** இரண்டு பத்திரிகைகள் கொடுத்தேன். ஒருவேளை மாறிப் போயிருக்கலாம். இரண்டு பத்திரிகைகள்தான் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆக, இதிலே உங்கள் பெயர் இல்லை.

திரு. கோ. பூவராகன். அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை மீது என்னுடைய தீர்ப்பை நாளை அடுத்த நாள் தெரிவிக்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) கோவை — சோலையாற்று அணைக்கட்டில் நிலச்சரிவினுல் தொழிலாளர்கள் சிலர் உயிரிழந்தும், சிலர் காயமுற்றதும் பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எம். பூபதி அவர்களும், திரு வை. சுவாமிநாதன், திரு ஆர். கருப்பையா ஆகிய மூவரும் 1970–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் தேதி அன்று கோவை சோலையாற்று அணைக்கட்டில் பல தொழிலாளர்கள் வேலை செய்த போது மண் சரிந்து சில தொழிலாளர்கள் உயிருடன் புதைப்பட்டதையும், பலர் காயமுற்ற விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். இது அரசினரின் அன்ருட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரணத்தால் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

(ஆ) திருவல்லிக்கேணியில் சாக்கடை சுத்தம் செய்யும்போது ஒரு கார்ப்பரேஷன் தொழிலாளி உயிரிழப்பும், இரு தொழிலாளிகள் மயக்கமுற்றதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் சென்னை மைலாப்பூர் பீமண்ணப்பேட்டையைச் சேர்ந்த செல்லன் என்ற சென்னை கார்ப்பரேஷன் தொழிலாளி 3—4—1970 வெள்ளிக்கிழமை காலை திருவல்லிக்கேணி சவுரிமுத்து தெருவிலுள்ள சாக்கடையைச் சுத்தம் செய்ய இறங்கியபோது மயக்கமுற்று, பிறகு ஆஸ்பத்திரியில் இறந்ததும், அதேபோல் மற்றும் இரு தொழிலாளிகள் மயக்கமுற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது குறித்ததுமான அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். இதுவும் அரசின் அன்ருட நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிற காரணத்தால் அனுமதி தர மறுக்கிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை விதி 244-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதி 41 (3)-ன் கீழ், ' ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது ' என்ற விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவைமுன் முடிவிற்கு விடப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.